சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No.OS.135/2021**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17ம் நாள் செவ்வாய்க்கிழமை

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய **பி.வா.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டபிரபு | தொழில் | ஆய்வாளர்,<br>இந்து சமய அறநிலையத்துறை. |
| தந்தை பெயர் | ராஜா | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 36 |

**17.02.2026 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் பிரதிவாதி ஆவேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். ஆவணங்கள் எதுவும் குறியீடு இல்லை. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.